வீட்டுக்காவலில் இந்து மகா சபா நிர்வாகி

உளுந்தூர்பேட்டை, நவ. 25–

உளுந்தூர்பேட்டையில் அகில பாரத இந்து மகா சபா பொதுச்செயலாளர் வீட்டு காவலில் வைக்கப் பட்டார்.

திருப்பரங்குன்றம் மலை தீபத்துாணில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் பல்வேறு பகுதிகளில் இருந்து இந்து அமைப்புகள் அங்கு திரளத் துவங்கினர்.

திருப்பரங்குன்றம் பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு இந்து அமைப்புகள் திரள்வதை தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முக்கிய பிரமுகர்கள் கைது செய்யப்பட்டனர். அந்த வகையில் அகில பாரத இந்து மகா சபா மாநில பொதுச்செயலாளர் பெரி செந்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு, வீட்டின் முன் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி ஹிந்து முன்னணி மாவட்ட பொதுச் செயலாளர் பாலகிருஷ்ணன், விருகாவூர் விநாயகர் கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டில் நேற்று வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். வீட்டில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அமைச்சரின் உதவியாளர் மிரட்டுகிறார் பண்ருட்டி எம்.எல்.ஏ., கலெக்டரிடம் புகார்

பண்ருட்டி, நவ. 25–

பண்ருட்டி எம்.எல்.ஏ., மோகன், நேற்று கடலுாரில் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமாரை சந்தித்து மனு அளித்தார். அதில், பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் எம்.எல்.ஏ., நிதி மற்றும் இதர அரசு நிதிகள் மூலம் பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சில பகுதிகளில் நுாலகம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் கோரிக்கை மனு அளித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

மக்களின் கோரிக்கைகளை ஏற்று பண்ருட்டி தொகுதியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஆளுங்கட்சியைச் சேர்ந்த கடலுார் மாவட்ட அமைச்சரின் உதவியாளர் வீரமணி எனக் கூறிக்கொண்டு, அரசு பணிகள் தொடர்பான அனைத்து விவரங்களையும் தன்னிடம் தான் தெரிவிக்க வேண்டும் என அதிகாரிகளை மிரட்டி வருகிறார். மேலும், எம்.எல்.ஏ., தொகுதி மேம்பாட்டு நிதி மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை செய்யக்கூடாது என அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார். இதுகுறித்து கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளேன்.

மேலும், அரசின் வெற்றி வீடு திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்க, பயனாளிகளிடம் த.வெ.க., வினர் பணம் வசூலிக்கின்றனர். வெற்றி வீடு வழங்கும் போது தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்து வீடுகள் வழங்க வேண்டும்.

கலெக்டருக்கு ஆபாசமாக எஸ்.எம்.எஸ்., அனுப்பிய கள்ளக்குறிச்சி த.வெ.க., எம்.எல்.ஏ., மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.


இவ்வாறு அவர் கூறினார்.

உளுந்தூர்பேட்டை அருகே பாலத்தில் கார் மோதி கல்லூரி மாணவர்கள் 9 பேர் படுகாயம்

உளுந்தூர்பேட்டை, நவ. 25–

புதுச்சேரியில் பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு சென்றபோது, உளுந்தூர்பேட்டை அருகே கார் விபத்தில் சிக்கியதில், பொறியியல் கல்லூரி மாணவர்கள் 9 பேர் படுகாயமடைந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியை சேர்ந்தவர் அறிவுடைநம்பி மகன் தருண், 21; பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரியில் பி.டெக்., மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். இவரது பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் தனது நண்பர்கள் 8 பேருடன் காரில் புதுச்சேரிக்கு சென்று, கேக் வெட்டி பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார். இரவு, பெரம்பலூர் நோக்கி திரும்பினர்.



■ உளுந்தூர்பேட்டை அடுத்த ஆசனூர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தில் மின் கம்பத்தின் மீது மோதி விபத்துக்குள்ளான கார்.

காரை, சக மாணவரான தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையை சேர்ந்த சிவாஜி மகன் தயா, 20; ஓட்டினார். நேற்று அதிகாலை 2:40 மணியளவில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அடுத்த ஆசனூரில் சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தில் சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்த கார், மேம்பாலத்தில் உள்ள மின் கம்பத்தின் மீது மோதி கவிழ்ந்து, விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் தருண், தயா, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அடுத்த சந்தனமனை கந்தசாமி மகன் ஸ்ரீராம், 20; தஞ்சாவூர் மாவட்டம் கிருஷ்ணாபுரம் ஜெய்சங்கர் மகன் கவின்பாரதி, 20; வேப்பங்காடு அறிவழகன் மகன் ஆதிஈஸ்வரன், 19; அந்தமான் நிக்கோபர் பகுதியைச் சேர்ந்த முருகேசன் மகன் தீபன்ராஜ், 22; கடலுார் மாவட்டம் செம்மண்டலம் சங்கர் மகன் பத்ரி நாராயணன், 19; குறிஞ்சிப்பாடி அடுத்த புலியூர் பரதன் மகன் சத்தி முருகன், 19; சிதம்பரம் அடுத்த கீரப்பாளையம் திருமலை மகன் அபிநவ், 19; ஆகிய 9 பேரும் படுகாயமடைந்தனர். அனைவரும் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

எடைக்கல் போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

சபரிமலையில் நாளை

அதிகாலை
3:00 நடை திறப்பு
3:05 நிர்மால்ய தரிசனம்
3:30 – 7:00 நெய் அபிஷேகம்
3:40 கணபதி ஹோமம்
காலை
7:30 உஷபூஜை
மதியம்
12:00 களபாபிஷேகம்
12:30 உச்ச பூஜை
1:00 நடை அடைப்பு
3:00 நடை திறப்பு
மாலை
6:30 தீபாராதனை
இரவு
7:00 புஷ்பாபிஷேகம்



9:30 அத்தாழ பூஜை
10:50 ஹரிவராசனம்
11:00 நடை அடைப்பு

பைக் மீது கார் மோதல் மயிலம் அருகே 2 பேர் பலி

மயிலம், நவ. 25–

மயிலம் அருகே பைக் மீது கார் மோதிய விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கனுார் அருகே உள்ள ஆண்டிப்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர் நீல மேகம், 65; இவர், நேற்று காலை 10:30 மணிக்கு, விக்கிரவாண்டி அடுத்த பொன்னங்குப்பம் கிராமத்தை சேர்ந்த சக்கரவர்த்தி, 65; என்பவருடன் பைக்கில் மயிலம் முருகன் கோவிலுக்கு கார்த்திகை தீப வழிபாட்டிற்காக சென்றார். செண்டூர் அருகே தேசிய நெடுஞ்சாலையை கடக்க முயன்ற போது சென்னையில் இருந்து விழுப்புரம் நோக்கி வந்த டொயோட்டா கார், பைக் மீது மோதியது. இந்த விபத்தில் பைக்கில் வந்த சக்கரவர்த்தி, நீலமேகம் ஆகிய இருவரும் துாக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தனர்.

இதில் சக்கரவர்த்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், நீலமேகம் உயிருக்கு ஆபத்தான நிலையில் முண்டியம்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். மயிலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலாஜி மற்றும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அரசு பஸ்சில் நகை திருட்டு

திண்டிவனம், நவ. 25–

புதுச்சேரி மாநிலம், பூமியான்பேட்டையை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவரது மனைவி விஜயலட்சுமி, 63; இருவரும் கடந்த ஆக.24ம் தேதி புதுச்சேரியில் இருந்து அரசு பஸ்சில் காஞ்சிபுரத்தில் உள்ள மகனை பார்க்க சென்றனர். இரவு மகன் வீட்டுக்கு சென்று கைப்பையை பார்த்தபோது, அதில் வைத்திருந்த, 18 சவரன் நகையை காணவில்லை. இது குறித்து திண்டிவனம் போலீசில் புகார் செய்தனர். அதில், திண்டிவனத்தில் உள்ள செஞ்சி பஸ் ஸ்டாண்டில் பஸ் நின்ற போது, கீழே இறங்கி இருவர் மீது சந்தேகம் இருப்பதாக தெரிவித்தனர்.

போலீசார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

சிறுமி கர்ப்பம் : 5 பேர் மீது வழக்கு

சிதம்பரம், நவ. 25–

சிதம்பரம் அருகே சிறுமியை, திருமணம் செய்து கர்ப்பமாக்கிய வாலிபர் உள்ளிட்ட 5 பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

சிதம்பரம் அடுத்த கவரப்பட்டு வீரன்கோவில் திட்டு கிராமத்தை சேர்ந்தவர் சின்னத்தம்பி மகன் ராமச்சந்திரன், 31; இவர், 17 வயது சிறுமியை காதலித்து இரு வீட்டாரின் சம்மதத்துடன் கடந்த ஜூலை 12 ம் தேதி திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இந்நிலையில் உடல்நலம் குன்றிய சிறுமி, கடந்த 17ம் தேதி சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்.

பரிசோதனையில், அவர் 3 மாத கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் அளித்த புகாரின் பேரில் சிதம்பரம் மகளிர் போலீசார், சிறுமியின் கணவர் ராமச்சந்திரன், அவரது பெற்றோர் உள்ளிட்ட 5 பேர் மீது குழந்தை திருமணம் தடை சட்டம் மற்றும் போக்சோ பிரிவில் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

மின் துறை அதிகாரிகள் 'திடீர்' ரெய்டு 13 இடங்களில் மின் திருட்டு கண்டுபிடிப்பு

விழுப்புரம், நவ. 25–

தமிழகத்தில் நடந்த மின் துறை அதிகாரிகளின் ரெய்டில், 13 இடங்களில் மின் திருட்டு கண்டறியப்பட்டது.

தமிழக மின் பகிர்மான கழகம், திருச்சி அமலாக்க கோட்டத்தில் உள்ள திருச்சி, தஞ்சாவூர், விழுப்புரம், வேலுார் அமலாக்க அதிகாரிகள், முன்னாள் ராணுவபடை வீரர்கள் குழு (விழுப்புரம், கடலுார் குழு) ஆகியோர் கடந்த சில தினங்களுக்கு முன் ரெய்டு சென்றனர்.

இந்த குழுவினர், வி.பரங்கினி, திருச்சிற்றம்பலம், இரும்பை, கோட்டூர், அபிராம்பட்டு, நெசல், கிளியனுார், அரசூர், பேரங்கியூர், ஓரையூர், பைத்தபாடி, ஏனாதிமங்கலம், மனபுதுார், கொனலவாடி, கே.வி.குப்பம், பெரளியூர், பெண்ணாடம், கொகரசன்பேட்டை, யு.மங்கலம், வேப்பூர், ஐவதுகுடி, பூலாம்பாடி, வடகரை, சேலுார், கூடலுார், புதுக்கடை, சாந்திக்குப்பம், காரணப்பட்டு, நல்லாத்துார், வளத்தி, மேல்மலையனுார், செஞ்சி, என்.ஆர்., பேட்டை, மேல்பட்டாம்பாக்கம், வாழப்பட்டு, திருகண்டேசுவரம், நெல்லிக்குப்பம், வானுார், அருவப்பாக்கம், தென்கோடிபாக்கம் ஆகிய பகுதிகளில் கூட்டாய்வு செய்தனர்.

இந்த பகுதிகளில், 13 இடங்களில் மின் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டது. இதனால், 15 லட்சத்து, 39 ஆயிரத்து, 555 ரூபாய், இழப்பீட்டு தொகையாக மின் நுகர்வோர்களுக்கு விதிக்கப்பட்டது.

இதில், சம்பந்தப்பட்ட மின் நுகர்வோர்கள் குற்றத்தை ஒப்புகொண்டு குற்றவியல் நடவடிக்கையை தவிர்க்க முன்வந்து அதற்குரிய சமரச தொகை ரூ.76,500 செலுத்தினர்.

இதனால் அதிகாரிகள், அவர்கள் மீது போலீஸ் ஸ்டேஷனில் புகார் ஏதும் அளிக்கவில்லை. மேலும், 8 இடங்களில் மின்சார சட்டப்படி, அபராத தொகை 1 லட்சத்து, 27 ஆயிரத்து 547 ரூபாய் விதிக்கப்பட்டது. மின் திருட்டு சம்பந்தமான தகவல்களை பொதுமக்கள், மொபைல் 9443329851 எண்ணில் தெரிவிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிதம்பரம் பல்கலை மாணவரை பணம் கேட்டு தாக்கிய 3 பேர் கைது

சிதம்பரம், நவ. 25 –

சிதம்பரத்தில் நடந்து சென்ற, பல்கலை ஆராய்ச்சி மாணவரிடம், பணம் கேட்டு தாக்கிய பெண் உட்பட மூவரை போலீசார் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் கோட்டூரை சேர்ந்தவர் செல்வம் மகன் ஸ்ரீகாந்த், 26; சிதம்பரத்தில் வாடகை வீட்டில் தங்கி, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில், இரண்டாம் ஆண்டு, தாவரவியல், ஆராய்ச்சி பட்டப்படிப்பு படித்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு ஊரில் இருந்து ரயில் மூலம் சிதம்பரம் வந்த ஸ்ரீகாந்த், தான் தங்கியுள்ள வீட்டிற்கு சிவபுரி சாலை வழியாக நடந்து சென்றுள்ளார்.



மனோஜ்



விஷ்வா

அப்போது, அந்த வழியாக ஸ்கூட்டரில் வந்த பெண் உள்ள மூவர், ஸ்ரீகாந்தை வழி மறித்து, பணம் கேட்டு, மிரட்டி கட்டை மற்றும் கல்லால் தலையில் தாக்கிவிட்டு தப்பி சென்றனர். படுகாயமடைந்த ஸ்ரீகாந்தை, அவ்வழியே சென்றவர்கள் மீட்டு, அரசு மருத்துவக்கல்லுாரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

இதுகுறித்து ஸ்ரீகாந்த் கொடுத்த புகாரின் பேரில், அண்ணாமலை நகர் இன்ஸ்பெக்டர் செல்வநாயகம் மற்றும் போலீசார் வழக்கு பதிந்து மாணவரை தாக்கிய சிதம்பரம் கோவிந்தசாமி நகர் கோபி மகன்கள் விஷ்வா, 20; மனோஜ் (எ) ராஜேஷ், 23 மற்றும் உசுப்பூர் இந்திரா நகர் பரமேஸ்வரன் மகள் லாவண்யா, 26; ஆகியோரை கைது செய்தனர்.

அரசு பஸ்சில் நகை திருட முயன்ற பெண் கைது

வேப்பூர், நவ. 25–

அரசு பஸ்சில் பெண்ணிடம் தங்க செயினை திருட முயன்ற பெண்ணை போலீசார் கைது செய்தனர்.

கடலுார் மாவட்டம், வேப்பூர் அடுத்த என்.நாரையூரைச் சேர்ந்தவர் மணிகண்டன் மனைவி மகாலட்சுமி, 34. இவர், நேற்று கண்டப்பங்குறிச்சியில் இருந்து வேப்பூர் செல்வதற்காக அரசு பஸ்சில் ஏறினார். அப்போது, அவரது பையிலிருந்த 2 சவரன் தங்க செயினை அடையாளம் தெரியாத பெண் திருட முயன்றார். உடன் சுதாரித்த மகாலட்சுமி மற்றும் பயணிகள் அந்த பெண்ணை பிடித்து வேப்பூர் போலீசில் ஒப்படைத்தனர்.



கல்பனா

விசாரணையில், மதுரை மாவட்டம், வண்டியூரைச் சேர்ந்த பிரபாகரன் மனைவி கல்பனா, 32 என்பது தெரிந்தது.

அதையடுத்து, வேப்பூர் போலீசார் வழக்கு பதிந்து, கல்பனாவை கைது செய்தனர்.

ஊரக வளர்ச்சி துறையினர் காலவரையற்ற வேலை நிறுத்தம்

கடலுார், நவ. 25–

கடலுார் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தினர் கோரிக்கையை வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டம் துவக்கினர். பண்ருட்டி, அண்ணாகிராமம் ஊராட்சி செயலர் அருள்குமார் மீதான பொய் வழக்கை திரும்ப பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கையை வலியுறுத்தி கடலுார் மாவட்டத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம், பணி மேற்பார்வையாளர்கள் சங்கம், ஊராட்சி செயலர்கள் கூட்டமைப்பு ஆகியன சார்பில் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்படி, கடலுார், குறிஞ்சிப்பாடி, அண்ணாகிராமம், பண்ருட்டி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை, மேல்புவனகிரி, குமராட்சி, காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், நல்லுார், கம்மாபுரம், மங்களுார், ஸ்ரீமுஷ்ணம் ஆகிய 14 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று துவக்கினர்.



■ ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் கடலுார் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வெறிச்சோடி காணப்பட்டது.

வட்டார வளர்ச்சி அதிகாரிகள், துணை வட்டார வளர்ச்சி அதிகாரிகள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், ஊராட்சி செயலர்கள், பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்கள் என, 900 பேர் போராட்டத்தில் ஈடுபட்டதால் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. இதன் காரணமாக மாவட்டத்தில் 'வெற்றி' இல்லம் கணக்கெடுத்தல் உள்ளிட்ட பணிகள் பாதிக்கப்பட்டன.

14ம் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு.S.சந்தானகிருஷ்ணன் நாயுடு
SG.Acct.Supervisor (Rtd) TNEB, Ex.Circle Secretary AESU

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

மனைவி மற்றும் குடும்பத்தினர்
4/7, சீனுவாசன் தெரு, புதுப்பாளையம், கடலுார்-1

விருத்தாசலம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் எண்.1
மு.வ.38/2026
வேப்பூர் தமிழ்நாடு கிராம வங்கி ரெப்.பை. அதன் கிளை மேலாளர் –வாதி
–எதிர்
கடலுார் மாவட்டம், வேப்பூர் வட்டம், பாசார் & அஞ்சல், மாரியம்மன் கோயில் தெரு, இலக்கம் 213/1ல் வசிக்கும்
இஷோக் மனைவி சிவமணி –1ம் எதிர்வாதி
இந்த நெம்பர் வாதி, 1ம் எதிர்வாதி போரிலும் இதர எதிர்வாதி போரிலும் தாக்கல் செய்த இவ்வழக்கில் 1ம் எதிர்வாதி ஆகிய தாங்கள் ஆஜராகி ஆட்சேபணை தாக்கல் செய்ய 21.12.2026 தேதியில் வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமோ 21.12.2026 தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் தாங்கள் வருகையில்லை என தீர்மானித்து தங்களுக்கு எதிராக இவ்வழக்கில் ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.
ஜி. பாலசந்திரன், பி.ஏ., பி.எல்., எஸ். ரேவதி, பி.ஏ., எல்.எல்.பி., எம். கார்த்திகா, பி.எஸ்ஸி., எல்.எல்.பி., எஸ். காயத்ரி, பி.எஸ்ஸி., எல்.எல்.பி., வி. விக்னேஷ்குமார், பி.ஏ., எல்.எல்.பி., வழக்குரைஞர்கள், விருத்தாசலம்.

திட்டக்குடி சார்பு நீதிமன்றம்
வ.1/2026 இன் மு.வ.95/2026
திட்டக்குடி வட்டம். முருகன்குடி & அஞ்சல், தெற்கு வீதி, இலக்கம் 2/234ல் வசிக்கும் முருகானந்தம் குமாரத்தியும், சின்னமணி மனைவியுமான பாரதி –மனுதாரர்/வாதி
–எதிர்
திட்டக்குடி வட்டம், முருகன்குடி & அஞ்சல், தெற்கு தெரு, இலக்கம் 236/2ல் வசிக்கும் லட்சுமணன் குமாரர் ரமேஷ் –எதிர்மனுதாரர்/6ம் எதிர்வாதி
இந்த நெம்பர் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/6ம் எதிர்வாதி போரிலும் இதர எதிர்வாதிகள் போரிலும் தாக்கல் செய்த இவ்வழக்கிலும் வ.ம.1/2026 மனுவிலும் எதிர்மனுதாரர்/6ம் எதிர்வாதி ஆகிய தாங்கள் ஆஜராகி ஆட்சேபணை தாக்கல் செய்ய 27.11.2026 தேதியில் வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிலும் வ.ம.1/2026 மனுவிலும் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமோ 27.11.2026 தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் தாங்கள் வருகையில்லை என தீர்மானித்து தங்களுக்கு எதிராக இவ்வழக்கிலும் வ.ம.1/2026 மனுவிலும் ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.
ஜி. பாலசந்திரன், பி.ஏ., பி.எல்., கே. சீனிவாசன், எம்.ஏ., எல்.எல்.பி., வழக்குரைஞர்கள், விருத்தாசலம்.

பேங்க் ஆஃப் பரோடா 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST
விழுப்புரம் கிளை
40/41, தியாகராஜர் தெரு, திரு.வி.க. சாலை, விழுப்புரம் - 605 602.
போன் : 04146-225424, Mail ID: villup@bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : திருமதி.மலர்கொடி, க/பெ. திரு.கலியபெருமாள், நெ.70, கோவிந்த ராஜ் பெருமாள் தெரு, விழுப்புரம்-605 602. மற்றும் **திருமதி.செல்வி (எ) கலைச்செல்வி, க/பெ. திரு. குப்புசாமி,** நெ.19/33, கோவிந்தராஜ் பெருமாள் தெரு, விழுப்புரம்-605602.

Loan A/c.No.**33100400000038,** நிலுவை தொகை ரூ.**21,74,003.61/-** மேலும் **15.11.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்

விழுப்புரம் பதிவு மாவட்டம், விழுப்புரம் இணை - 1, சார்பதிவு அலுவலகம், விழுப்புரம் நகரம் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு-A, பிளாக்-14, கதவு எண்.19 மற்றும் டவுன் சர்வே எண். 1 (புஞ்சை சர்வே நெ.490-1.29)ல் அமைந்துள்ள வீட்டுமனை மற்றும் கட்டிடத்தின் பரப்பளவு. கிழக்கு முதல் மேற்கு வரை 31½ அடி, தெற்கிலிருந்து வடக்கு வரை 96அடி, இதன்மொத்த அளவு 3024 சதுரடி அல்லது 281.10 சதுரமீட்டர்கள் மற்றும் திருமதி. மலர்கொடி க/பெ. திரு. கலியபெருமாள் மற்றும் திருமதி.கலைச்செல்வி க/பெ. திரு. குப்புசாமி பெயரில் கட்டப்பட்ட கட்டிடம் உட்பட. **நான்கு எல்லைகள்** : ஜி.ஆர்.பி.தெருவிற்கு தெற்கு, காலி நிலத்திற்கு வடக்கு, திருமதி.பாஞ்சாலி மற்றும் திரு.கண்ணன் அவர்களின் நிலத்திற்கு கிழக்கு, பொதுவான பாதைக்கு மேற்கு.

உள்ளது. **சுவாதீன நிலை : ஆக்கப்பூர்வ நிலை**

நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ. 35,38,000/- | டேவணித் தொகை ரூ. 3,53,800/- | ஏல உயர்வு தொகை ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **23.12.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 10.12.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 23.12.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction மற்றும் Baanknet.com என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9481183507 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 24.11.2026
இடம் : விழுப்புரம்

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா